முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 29 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆவனி மாதம் 05 திகதி வரை

(14.08.2022 ஞாயிறு முதல் 21.08.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வாழ்வாதாரம் காக்கும் சக்திமிகு
   வள்ளலாய் வந்த அரங்கனே
   ஊழ்போக்கும் ஞான தேசிகனே
   உமைபோற்றி அகத்திய மகரிஷியானும்
2. யானும் இந்தியா தமிழகத்தின்
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை
   ஞானம்பட சுபகிருது நள்ளிதிங்கள் இருபான்நவ திகதி மேல்
   நாட்டிடுவேன் யாளிதிங்கள் பஞ்சதிகதி வரை நடக்கும்
3. நடக்கும் வார நிகழ்வாகவே
   நாட்டிடுவேன் வார ஆசிதனை
   தடைகளை வெல்லும் வண்ணம்
   தலைமைகள் கொண்ட பூமி இந்தியா தமிழகமாகும்
4. ஆகவே அறமும் ஆன்மீகமும்
   ஆற்றலாக கொண்ட பூமி இது
   வகையறியா இந்த கலியிலே
   வளர்ச்சியும் மலர்ச்சியும் காணா வண்ணம்
5. வண்ணமுடன் ஊழல் பெருகி
   வாழ்வாதாரம் மக்களிடையே
   பின்னடைவாய் பெரும் பிணியாயிருக்க
   புகலுவேன் இந்தகதி மாற்றும் வண்ணம்
6. வண்ணமுடன் ஆளுமைகள் மாறி
   வளர்ச்சி தரும் வல்லமை தரும்படி
   எண்ணமெலாம் இறை சிந்தைபட
   இங்கு ஆளுமை செயல்பாடு கொண்டுவர
7. வருகவே எல்லாத்துறைகளையும்
   வளர்க்கும் விதமாகத் தலைமை
   பெருமைபட மாற்றம் காணும்
   பொருள்பற்றுள்ள அதிகார வர்க்கமும் மாறி
8. மாறியே தயவான செயலாகி
   மக்களுக்காய் தேசத்துக்காய்
   ஆறுதல்பட சேவை ஆற்றும்
   அதிகார வர்க்கங்களாக மாறி

9. மாறியே இந்தியா தமிழகமும்
மண்ணின் மகத்துவம் போற்றிட
ஆறுதலா இயற்கை பலம்கூடி
அனைத்து வளமும் மண்ணில் கிடைக்க
10. கிடைக்கவே தேவைக்கு மேலான
குறைவிலா வளர்ச்சிக் கண்டு
தடைபடா சகலத் திட்டங்களும்
தமிழகம் இந்தியாவில் வெற்றி பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆடி மாதம் 29ம் நாள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 05ம் நாள் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தினில் துன்பப்படுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை காக்கின்ற வல்லமை மிக்க மாபெரும் வள்ளலாய் முருகப்பெருமானின் அம்சமாக வந்துதித்த அரங்க மகானே மக்கள் முன் ஜென்மங்களில் செய்திட்ட பாவங்களால் தோன்றிய ஊழ்வினை போக்கி காக்கும் ஞானதேசிகனே அற்புதமான உம்மை போற்றியே அகத்தியமகரிஷி யானும் இந்தியா தமிழகத்தினிலே சுபகிருது வருடம் ஆடி மாதம் 29ம் நாள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 5ம் நாள் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

எல்லா தடைகளையும் வென்று சாதிக்கும் வல்லமை மிக்க தலைமைகளை கொண்ட புனித தேசமே இந்தியா தமிழகமாகும் ஆகவே அறமும் ஆன்மீகமும் ஆற்றலாக கொண்ட தேசமே இத்தேசமாகும் ஆனால் முறையறியாமல் இந்த கலியுகத்தினிலே வளர்ச்சியும் மலர்ச்சியும் அடைந்திடாத வண்ணம் நாட்டினில் அறமும் ஆன்மீகமும் குறைந்து ஊழல்பெருகி மக்களின் வாழ்வாதாரம் குறைந்து மக்கள் பின்னடைவை சந்தித்தது மட்டுமல்லாமல் மக்கள் நோய் துன்பத்திற்கும் ஆளாகி அல்லல் படுகின்றனர்.

இந்தவிதமான பெரும்பிணித் துன்பத்தில் இருந்து மீண்டு வரவேண்டுமப்பா. நாட்டை ஆட்சி புரிவோரின் எண்ணங்களிலே மாற்றங்கள் உண்டாகி நாட்டின் வளர்ச்சியை மையமாக கொண்டு செயல்படுவதோடு வல்லமையாக செயல்பட வேண்டும் எண்ணமெல்லாம் தெய்வசிந்தனையுடன் வழிபாடுகளுடன் ஆளுமைகள் செயல்பட வேண்டுமப்பா.

தெய்வீக சிந்தையுடன் தர்மத்தின் வழி நடந்து வரவர எல்லா விதமான துறைகளையும் வளர்க்கும் விதத்தினிலே தலைமைகள் பெருமைபட மாற்றம் காணுமப்பா. பொருள் பற்றுள்ள அதிகார வர்க்கமும் மனம்மாறி தயவுடன் நடந்து அவர்கள் மக்களுக்கானவர்களாக தேசத்தின் நலம் போற்றும் நல்லோர்களாக மாறி மக்களுக்கு ஆறுதல் தரும் தயவுமிக்க நல்ல அதிகார வர்க்கங்களாக மாறிடுவர்.

அவர்களெல்லாம் மனம் மாறியே இந்தியா தமிழகத்தின் மாண்புகளையும் மகத்துவத்தையும் போற்றி வாழ்ந்திட இயற்கையும் ஆதரவாய் மாறி துணைநின்று நாட்டினில் இயற்கை பலம் பெருகி அனைத்து விதமான வளங்களும் இந்தேசத்தில் உண்டாகி தேவைக்கு மேலாக உற்பத்தி பெருகி நல்ல வளர்ச்சியினை அடைந்து அரசு செயல்படுத்தும் எல்லா நலத்திட்டங்களும் தடையின்றி நடந்து இந்தியா தமிழகம் வெற்றி பெறுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–